ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

**வெளியிடுபவர்** பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

**திகதி** 2018.07.06

## நாணயக் கொள்கை மீளாய்வு: இல.4 - 2018

### இலங்கை மத்திய வங்கி கொள்கை வட்டி வீதங்களைத் தற்போதைய மட்டங்களிலேயே பேணுகின்றது

**இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை 2018 யூலை 5ஆம் நாள் நடைபெற்ற அதன் கூட்டத்தில் கொள்கை வட்டி வீதங்களை அவற்றின் தற்போதைய மட்டங்களில் பேணுவதற்குத் தீர்மானித்தது. இதற்கமைய துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் முறையே 7.25 சதவீதமாகவும் 8.50 சதவீதமாகவும் தொடர்ந்தும் காணப்படும். நடுத்தர காலத்தில் பணவீக்கத்தை நடு ஒற்றை இலக்க மட்டத்தில் உறுதிப்படுத்துவதும் அதன் மூலம் இலங்கைப் பொருளாதாரத்தின் சாதகமான வளர்ச்சித் தோற்றப்பாட்டிற்குப் பங்களிப்பதுமான நோக்குடன் இசைந்து செல்லும் வகையில் சபையின் தீர்மானம் அமைந்துள்ளது.**

### தற்காலிக வழங்கல்பக்க அழுத்தங்களுக்கு மத்தியிலும் பணவீக்கம் நடு ஒற்றை இலக்க மட்டங்களில் உறுதியடையும்

உள்நாட்டுப் பெற்றோலிய உற்பத்திகளின் விலைகளின் மேல் நோக்கிய திருத்தங்கள் மற்றும் ஏனைய நிருவகிக்கப்பட்ட தீர்மானமான விலைகள் என்பவற்றின் விளைவினால் முக்கியமாக ஏற்பட்ட தற்காலிக உயர்வடைவிற்கு மத்தியிலும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் என்பவற்றால் அளவிடப்படுகின்ற முதன்மைப் பணவீக்கமானது தொடர்ந்தும் குறைந்த நடு ஒற்றை இலக்க மட்டங்களிலேயே காணப்பட்டது. மையப் பணவீக்கமும் தொடர்ந்தும் குறைவடைந்ததுடன் பணவீக்க எதிர்பார்ப்புக்கள் தொடர்ந்தும் சாதகமான நிலையிலேயே காணப்படுகின்றது. அருந்தல் காலப்பகுதியில் உள்நாட்டு உணவு வழங்கல்கள் மீதான அழுத்தங்கள் குறுங்காலத்தில் விலைகள் மீதான சில மேல் நோக்கிய அழுத்தங்களை ஏற்படுத்திய போதிலும் பணவீக்கமானது ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியில் விரும்பத்தக்க நடு ஒற்றை இலக்க மட்டத்திலேயே தொடர்ந்தும் காணப்படுமெனவும் நடுத்தர காலத்தில் உறுதியான பணவீக்க எதிர்பார்ப்புக்கள் மற்றும் பொருத்தமான கொள்கைச் சீராக்கங்கள் என்பவற்றினால் நிலையாக உறுதிப்படுத்தப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2018இன் முதற்காலாண்டில் பொருளாதார வளர்ச்சி தொடர்ந்தும் குறைந்தளவில் காணப்பட்டது

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட தற்காலிக மதிப்பீடுகளுக்கிணங்க இலங்கைப் பொருளாதாரமானது 2017இன் திருத்தப்பட்ட ஆண்டு வளர்ச்சி வீதமான 3.3 சதவீதத்துடன் ஒப்பிடும் போது 2018இன் முதலாம் காலாண்டில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 3.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளது. 2018இன் முதலாம் காலாண்டிற்கான பொருளாதார வளர்ச்சியானது பணிகள் மற்றும் வேளாண்மை சார்ந்த நடவடிக்கைகளினால் பிரதானமாகத் தூண்டப்பட்டுள்ள போதிலும் கைத்தொழில் சார்ந்த நடவடிக்கைகள் மிதமான வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்துள்ளது. இறைத் திரட்சிக்கு மத்தியிலும் நடுத்தர காலத்தில் பொருளாதாரமானது அதன் உள்ளார்ந்த வளர்ச்சியை அடைவதற்கு அமைப்பியல் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் தொடர்ச்சியான கடப்பாடுகள் உதவிபுரியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. உலகளாவிய பொருளாதாரத்தின் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய மீட்சியானது உள்நாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் போல் தோன்றுகின்ற அதேவேளையில் நிலவுகின்ற குறைந்த பணவீக்கச் சூழல் மற்றும் பொருத்தமான பெறுமதி வாய்ந்த நெகிழ்ச்சித்தன்மையுடைய செலாவணி வீதம் என்பனவும் உயர்ந்த வளர்ச்சியை வசதிப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## பெயரளவு மற்றும் உண்மை ஆகிய இரண்டு நியதிகளிலும் வட்டி வீதங்கள் தொடர்ந்தும் உயர்வாகக் காணப்படுகின்ற அதேவேளையில் பணநிரம்பலின் வளர்ச்சி மெதுவடைந்தது

உள்நாட்டுப் பணச் சந்தையில் நிலவுகின்ற பற்றாக்குறையான திரவத்தன்மை நிலைமைகளுக்குப் பதிலிறுத்தும் வகையில் அண்மைக் காலத்தில் குறுங்கால வட்டி வீதங்கள் அதிகரித்திருந்தன. குறுங்கால அரச பிணையங்களின் விளைவுகள் கடந்த அண்மைக் காலங்களில் கலப்பான அசைவுகளை வெளிப்படுத்தியிருந்த அதேவேளையில் ஏனைய சந்தை வட்டி வீதங்கள் உயர்ந்த மட்டங்களில் உறுதியடையும் போல் தோன்றுகின்றன. பொருத்தமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் குறுங்கால திரவத்தன்மைக் கரிசனைகளை நிவர்த்தி செய்யுமெனவும் மத்திய வங்கியின் நடுநிலையான கொள்கை நிலை மற்றும் நிலவுகின்ற குறைந்த பணவீக்கச் சூழல் என்பவற்றுடன் இசைந்து செல்லும் வகையில் பெயரளவு மற்றும் உண்மை வட்டி வீதங்கள் படிப்படியாகக் கீழ் நோக்கிச் சீராக்கப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை விரிந்த பணநிரம்பலின் ($M_{2b}$) ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி 2018 மேயில் மெதுவடைந்துள்ளது. 2018 மாச்சில் அவதானிக்கப்பட்ட பருவ காலத்தை அடிப்படையாகக் கொண்ட விழாக்கால கொடுகடன் விரிவாக்கத்தினைத் தொடர்ந்து வர்த்தக வங்கிகளால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனின் வளர்ச்சியும் 2018இன் ஏப்பிறல் மற்றும் மே மாதங்களில் மெதுவடைந்துள்ளது.

## உறுதி வாய்ந்த வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கு நிலைமைகளால் வெளிநாட்டுத் துறையின் செயலாற்றம் செழிப்படைந்துள்ளது

ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களின் மிதமானதன்மை இறக்குமதிச் செலவினத்தின் அதிகரிப்புக்களுடன் சேர்ந்து 2018இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறையில் விரிவாக்கமொன்றை ஏற்படுத்தியது. அண்மைக்கால இறக்குமதிகளின் வளர்ச்சியானது தனிப்பட்ட வாகனங்கள் மற்றும் தங்கம் என்பவற்றின் இறக்குமதிகளால் பெருமளவில் தூண்டப்பட்டதுடன் பிற்பகுதியில் தங்கம் மீதான சுங்கத் தீர்வையின் விதிப்பினால் கட்டுப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள் என்பன தொடர்ந்தும் அவற்றின் சாதகமான வளர்ச்சி உத்வேகத்தைக் காட்டின. இறுக்கமான உலகளாவிய நிதியியல் நிலைமைகளினால் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் இரண்டாந்தரச் சந்தை என்பவற்றிலிருந்தான சில வெளிப்பாய்ச்சல்கள் உடனடியாக

ஏற்பட்டிருப்பினும், முதலாந்தரச் சந்தையின் உட்பாய்ச்சல்களின் விளைவாக ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் தேறிய ஒட்டுமொத்த உட்பாய்ச்சலொன்று ஏற்பட்டது. இத்தகைய அபிவிருத்திகளுக்கு மத்தியிலும் மத்திய வங்கியானது 2018இன் முதலரைப்பகுதியில் உள்நாட்டுச் சந்தைகளிலிருந்து ஐ.அ.டொலர் 141 மில்லியன் பெறுமதியான தேறிய வெளிநாட்டுச் செலாவணி உள்ளீர்ப்பு ஒன்றினைப் பதிவுசெய்துள்ளது. 2018 ஏப்பிறலில் இடம்பெற்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வெற்றிகரமான வழங்கல், பன்னாட்டு நாணய நிதியத்துடனான விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஐந்தாவது கட்டப் பெறுகைகள், அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் உரித்து நீக்கத்திலிருந்தான பெறுகைகள் மற்றும் 2018இன் முதற்பகுதியில் உள்நாட்டுச் சந்தையிலிருந்தான மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகள் என்பவற்றால் மொத்த அலுவல்சார் ஒதுக்கு நிலைமைகள் 2017 இறுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 8.0 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2018 யூன் இறுதியில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 9.2 பில்லியனுக்கு மேம்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிரான இலங்கையின் ரூபா 3.6 சதவீதத்தால் தேய்வடைந்துள்ளது. பன்னாட்டுச் சந்தையில் நிலவிய ஐ.அ.டொலர் பரந்த அடிப்படையில் பலப்படுத்தப்பட்டமையைப் பிரதிபலிக்கும் வகையில் இத்தகைய தேய்வின் பெரும்பாலானவை ஏப்பிறல் பிற்பகுதியிலிருந்து பதிவுசெய்யப்பட்டவையாகும். வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்படுகின்ற ஊக நடத்தைகள் மற்றும் செலாவணி வீதத்தின் தேவையற்ற தளம்பல் என்பனவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கி தலையிட்டது.

**நடு ஒற்றை இலக்க மட்டங்களில் பணவீக்கத்தினை உறுதியடையச் செய்வதற்காக நாணயக் கொள்கை நிலையில் மாற்றம் செய்யப்படவில்லை**

அண்மைக்கால அபிவிருத்திகள் மற்றும் முக்கிய பேரண்டப் பொருளாதார மாறிகளுக்கான தோற்றப்பாடுகளின் அடிப்படையில் மத்திய வங்கியின் நாணயச் சபையானது தற்போதைய நாணயக் கொள்கை நிலையைத் தொடர்ந்தும் பேணுவது பொருத்தமானதாக இருக்குமென்ற கருத்தினைக் கொண்டுள்ளது. மத்திய வங்கியானது உலகளாவிய சந்தை அபிவிருத்திகள் மற்றும் சாத்தியமான கசிவுத்தாக்க விளைவுகள் மீது கவனத்தினைக் கொண்டிருக்கின்ற அதேவேளையில் உள்நாட்டு உண்மைப் பொருளாதார நடவடிக்கைகளை நெருக்கமாகக் கண்காணிப்பதிலும் தொடர்ந்து ஈடுபடுகின்றது.

அதன்படி, நாணயச் சபையானது மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தையும் துணைநில் கடன்வழங்கல் வீதத்தையும் அதன் தற்போதைய மட்டங்களிலேயே தொடர்ந்தும் பேணுவதெனத் தீர்மானித்துள்ளது.

**நாணயக் கொள்கைத் தீர்மானம்: கொள்கை வீதங்கள் மாற்றமடையவில்லை**

| | |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 7.25% |
| துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் | 8.50% |
| நியதி ஒதுக்கு விகிதம் | 7.50% |

**தகவல் குறிப்பு:**

ஆளுநர் முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி அவர்களுடனான பத்திரிகை மாநாடு இன்று (2018 யூலை 06) நண்பகல் 12.00 மணிக்கு இலங்கை மத்திய வங்கியின் ஜோன் எக்ஸ்ரர் பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

நாணயக் கொள்கை மீதான அடுத்த கிரமமான அறிக்கை 2018 ஓகத்து 3ஆம் நாள் வெளியிடப்படும்.

**தரவு இணைப்புக்கள்:**

**அட்டவணை 01: உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (தற்காலிகமானவை)**

| பொருளாதார நடவடிக்கைகள் | ஆண்டிற்கு ஆண்டு% மாற்றம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 2016 | 2017 | | | | | 2018 |
| | வருடாந்தம் | 1ஆம் காலாண்டு | 2ஆம் காலாண்டு | 3ஆம் காலாண்டு | 4ஆம் காலாண்டு | வருடாந்தம் | 1ஆம் காலாண்டு |
| வேளாண்மை | **-3.8** | -4.4 | -3.1 | -3.0 | 7.1 | **-0.8** | 4.8 |
| கைத்தொழில்கள் | **5.8** | 3.7 | 5.6 | 5.3 | 4.1 | **4.6** | 0.9 |
| பணிகள் | **4.7** | 4.3 | 2.7 | 2.8 | 3.2 | **3.2** | 4.4 |
| மொ.உ.உற்பத்தி | **4.5** | **3.4** | **3.0** | **3.2** | **3.5** | **3.3** | **3.2** |

*மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்*

**அட்டவணை 02: பணவீக்கம்**

| மாதம் | | திசெ 17 | சன 18 | பெப் 18 | மாச் 18 | ஏப் 18 | மே 18 | யூன் 18 |
|---|---|---|---|---|---|---|---|---|
| முதன்மைப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு(2013=100) | 7.1 | 5.8 | 4.5 | 4.2 | 3.8 | 4.0 | 4.4 |
| | தேநுவிசு(2013=100) | 7.3 | 5.4 | 3.2 | 2.8 | 1.6 | 2.1 | - |
| மையப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு % மாற்றம்) | கொநுவிசு(2013=100) | 4.3 | 3.5 | 3.5 | 3.4 | 3.5 | 3.2 | 3.4 |
| | தேநுவிசு(2013=100) | 2.7 | 2.1 | 2.0 | 1.9 | 1.9 | 1.7 | - |

*மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்*

## அட்டவணை 03: நாணயத் துறை அபிவிருத்திகள் (தற்காலிகமானவை)

| குறிகாட்டி | வெளிநின்ற தொகை (ரூ.பில்லியன்) | | | | | ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சன 18 | பெப் 18 | மாச் 18 | ஏப் 18 | மே 18 | சன 18 | பெப் 18 | மாச் 18 | ஏப் 18 | மே 18 |
| ஒதுக்குப் பணம் | 930 | 938 | 997 | 1,000 | 973 | 12.3 | 10.7 | 11.8 | 12.9 | 13.2 |
| விரிந்த பணம் ($M_{2b}$) | 6,378 | 6,451 | 6,607 | 6,692 | 6,671 | 16.8 | 16.2 | 16.4 | 16.8 | 15.0 |
| தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | 128 | 116 | 106 | 119 | 74 | 138.9 | 131.3 | 128.6 | 135.0 | 123.4 |
| தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் | 6,251 | 6,335 | 6,500 | 6,572 | 6,597 | 8.0 | 7.0 | 7.5 | 8.2 | 7.8 |
| அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் | 2,221 | 2,246 | 2,278 | 2,322 | 2,324 | 5.1 | 2.4 | 2.9 | 5.3 | 3.8 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் (அ) | 528 | 546 | 557 | 581 | 608 | -1.5 | -1.4 | -2.6 | 0.8 | 4.8 |
| தனியார் துறைக்கான கொடுகடன் (அ) | 4,842 | 4,900 | 5,022 | 5,044 | 5,073 | 15.2 | 14.6 | 15.3 | 15.3 | 15.1 |
| விரிந்த பணம் ($M_4$) | 7,900 | 7,979 | 8,112 | 8,218 | 8,207 | 17.7 | 17.1 | 16.7 | 16.8 | 15.1 |

(அ) திருத்தப்பட்டது

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

## அட்டவணை 04: வட்டி வீதங்கள்

| வட்டி வீதம் (%) | திசெ 17 முடிவில் | மாச்சு 18 முடிவில் | ஏப் 18 முடிவில் | மே 18 முடிவில் | யூன் 18 முடிவில் | 05 யூலை 18 இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|
| **மத்திய வங்கியின் கொள்கை வீதங்கள்** | | | | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 7.25 | 7.25 | 7.25 | 7.25 | 7.25 | 7.25 |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 8.75 | 8.75 | 8.50 | 8.50 | 8.50 | 8.50 |
| **நிறையேற்றப்பட்ட சராசரி அழைப்புப் பணவீதம்** | 8.15 | 8.41 | 7.86 | 7.93 | 8.50 | 8.48 |
| **திறைசேரி உண்டியல் விளைவுகள் (முதலாந்தரச் சந்தை)** | | | | | | |
| 91-நாள் | 7.69 | 8.17 | 8.10 | 8.34 | 8.32 | 8.35 |
| 182-நாள் | 8.30 | - | - | 8.93 | 8.85 | 8.85 |
| 364-நாள் | 8.90 | 9.69 | 9.59 | 9.62 | 9.39 | 9.43 |
| **கடன்வழங்கல் வீதங்கள்** | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம் (வாராந்தம்) | 11.55 | 11.55 | 11.21 | 11.42 | 11.33 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம் | 13.88 | 14.04 | 14.13 | 14.06 | - | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம் | 14.31 | 14.25 | 14.29 | 14.15 | - | - |
| **வைப்பு வீதங்கள்** | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 9.07 | 9.00 | 8.98 | 8.91 | 8.92 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் | 11.48 | 11.41 | 11.38 | 11.23 | 11.26 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் | 10.06 | 10.33 | 10.75 | 10.67 | - | - |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*